DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | மோகன் |
| Father's / Husband's Name | : | மணி |
| Age | : | 45 |
| Religion | : | இந்து |
| Calling | : | கூலி |
| Caste | : | B.C |
| Village | : | முத்துக்கடை |
| Date | : | 08.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இராணிப்பேட்டை முத்துகடையில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சிவா என்பவரை தெரியும். அவர் என் நண்பர். 26.10.2015 அன்று சிவாவின் அண்ணன் ஆறுமுகம் என்பவரது மகள் லாவண்யா என்பவருக்கு திருமணம் முடிவாகி இருந்தது. 24.10.2015 அன்று நலுங்கு வைக்கும் வைபவம் நடந்தது. அன்று திருவண்ணாமலையை சேர்ந்த 4 பேர் லாவண்யாவை கடத்தி கொண்டுபோய் விட்டார்கள். அப்போது தடுக்க சென்ற என் நண்பர் சிவாவை இண்டிகா காரின் வைபரை பிடித்துக்கொண்டு கடப்பந்தாங்கல் முன்பாக உள்ள ரோட்டில் திரும்பி ரத்தனகிரி அருகில் சென்ற போது வைபரை கொண்டு கண்ணாடியை உடைத்து டிரைவரை பிடிக்க சென்றபோது அவர் உதைத்ததால் கிழே விழுந்து இறந்துவிட்டதாக

கேள்விப்பட்டேன். அதன் பிறகு அவரை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தபோது வழியிலேயே இறந்துவிட்டார் என்று தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW11 |
| Name | : | வீரசிங்கம் |
| Father's / Husband's Name | : | கணேசன் |
| Age | : | 47 |
| Religion | : | இந்து |
| Calling | : | டிங்கரிங் ஒர்க் |
| Caste | : | M.B.C |
| Village | : | வாலாஜா |
| Date | : | 08.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாபேட்டை காந்திநகரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சிவா என்பவரை தெரியும். ஆனால் அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலிசார் விசாரணையில் 26.10.2015 அன்று சிவாவின் அண்ணன் ஆறுமுகம் என்பவரது மகள் லாவண்யா என்பவருக்கு திருமணம் முடிவாகி இருந்தது என்றும் 24.10.2015 அன்று நலுங்கு வைக்கும் வைபவம் நடந்தது என்றும் அன்று திருவண்ணாமலையை சேர்ந்த 4 பேர் லாவண்யாவை கடத்தி கொண்டுபோய் விட்டார்கள் என்றும் அப்போது

தடுக்க சென்ற என் நண்பர் சிவாவை இண்டிகா காரின் வைபரை பிடித்துக்கொண்டு கடப்பந்தாங்கல் முன்பாக உள்ள ரோட்டில் திரும்பி ரத்தனகிரி அருகில் சென்ற போது வைபரை கொண்டு கண்ணாடியை உடைத்து டிரைவரை பிடிக்க சென்றபோது அவர் உதைத்ததால் கிழே விழுந்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும் அதன் பிறகு அவரை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தபோது வழியிலேயே இறந்துவிட்டார் என்பதை தெரிந்துகொண்டு என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றும் நோக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW12 |
| Name | : | சவுந்தரி |
| Father's / Husband's Name | : | கிருஷ்ணன் |
| Age | : | 35 |
| Religion | : | இந்து |
| Calling | : | கூலி |
| Caste | : | M.B.C |
| Village | : | வாலாஜா காந்தி நகர் |
| Date | : | 08.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாபேட்டை காந்திநகரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சிவக்குமார் என்பவரை தெரியும். இறந்துபோன சிவா என் எதிர் வீட்டுக்காரர் ஆவார். 3, 4 வருடங்களுக்கு முன்பு சிவக்குமாரின் அண்ணன் மகள் லாவண்யாவை யாரோ கடத்திக்கொண்டு போகும்போது அதனால் சிவக்குமாருக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலிசார் விசாரணையில் 24.10.2015 அன்று எங்கள் வீட்டிற்கு முன்பாக ஒரு இண்டிகா கார் நின்றுகொண்டிருந்தது என்றம் அந்த

காரில் இருந்த 4 நபர்கள் ஆறுமுகம் மகள் லாவண்யாவை கடத்திக்கொண்டு சென்றார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் கடத்தி கொண்டு போனவர்களை சிவக்குமார் மணிகண்டன் கார்த்திகேயன் மற்றும் ஜெயக்குமார் தயாளன் ஆகியோர் துரத்திக்கொண்டு சென்றார்கள் என்றும் வாலாஜா பேருந்து நிறுத்தத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட போது சிவக்குமார் அந்த இண்டிகா காரை வைபரை பிடித்துக்கொண்டார் என்றும் சென்னை மார்க்கமாக சென்று அம்மனந்தாங்கல் ரோட்டில் திரும்பி வேலூர் நோக்கி செல்லும் போது ரத்தினகிரி மேம்பாலத்தின் அருகில் சென்ற போது வைபரை கொண்டு கண்ணாடியை உடைத்து டிரைவரை பிடிக்க சென்றபோது அவர் உதைத்ததால் கிழே விழுந்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும் அதன் பிறகு அவரை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தபோது வழியிலேயே இறந்துவிட்டார் என்பதை தெரிந்துகொண்டு என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றும் நோக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**